குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

(முற்பகல் 10-20)

(2) தகவல் கோரல்.

அ. உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகள் தள்ளுபடி குறித்து.

* திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல்வேறு 41, 42 விதிகளின்கீழ் அறிவிப்பு கொடுத்தும் நீங்கள் அவைகளையெல்லாம் தள்ளுபடி செய்து அனுப்புகிறீர்களே, அது நியாயம் தானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Overruled பாயின்ட் ஆப் ஆர்டர் நிராகரிக்கப்பட்டது. உட்காருங்கள்.

ஆ. 'இந்தியா டுடே' பத்திரிகை மீது கொடுத்த உரிமைப் பிரச்சினை குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 'இண்டியா டுடே' பத்திரிகையின் மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்து, அதை நீங்கள் எழுதி அந்தப் பத்திரிகையிடமிருந்து தகவல் தெரிந்து முடிவு தெரிவிப்பதாகத் தெரிவித்திருந்தீர்கள். சட்டமன்றம் கூடி இத்தனை நாள் ஆகியும் உரிமைப் பிரச்சினையின் மீது தங்களுடைய முடிவு இதுவரையில் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள். அந்த நோட்டீஸ் 'லாப்ஸ்' ஆகிவிட்டதா, இல்லையா என்று தெரியவில்லை. அதைப் பற்றி நீங்கள் என் கவனத்திற்கு இப்போதுதான் கொண்டு வந்தீர்கள். அது பற்றி நாளை மறுநாள் சொல்கிறேன்.

இ. அசெம்பிளி அலுவலர்களுக்குப் 'பாஸ்' வழங்குவது குறித்து.

திரு. ரா. உமாநாத் : கடந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் அசெம்பிளி மெம்பர்சுக்கு பல வசதிகள் அனவுன்ஸ் பண்ணியபொழுது, ஒரு வாக்குறுதியை நிதியமைச்சர் கொடுத்தார். அசெம்பிளியைச் சார்ந்திருக்கக் கூடிய அலுவலர்களுக்கு இந்த செஷனுக்கு வருகிறபொழுது டிரான்ஸ்போர்ட்டுக்கு ஃப்ரி பாஸ் கொடுப்பதற்கு ஒரு அஷூரன்ஸ் கொடுக்கப்பட்டது.

(குறுக்கீடு) போன அசெம்பிளி செஷனிலே மெம்பர்சுக்கு எல்லாம் வசதிகளை பெருக்குவதற்கு நீங்கள் அனவுன்ஸ் பண்ணியபொழுது, அசெம்பிளி ஸ்டாஃபுக்கு செஷன்ஸ்பொழுது, இங்கே வந்து போக, ஃப்ரீ பாஸ் கொடுப்பதாக, கிளியர் அஷுரன்ஸ் கொடுத்தீர்கள். ஆனால், இந்த செஷனில் இன்னும் கொடுக்கப்படவில்லையென்று நான் அறிகிறேன். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : வாக்குறுதியைக் கொடுத்திருந்தால் நிதியமைச்சர் அதை நிறைவேற்றுவார்.

திரு. ரா. உமாநாத் : கொடுத்திருந்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப் படவில்லை. காசு கொடுத்துத்தான் பஸ்சிலே போய்விட்டு வருகிறார்கள். ஃப்ரீ பாஸ் கொடுக்கப்படவில்லை, செஷன் முடியப் போகிறது. ஆகவே, Definitely you must say something.

(சில உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். 41, 42 விதிகளின்கீழ் கொடுத்தவைபற்றி கேட்பதற்காக எழுந்திருக்க வேண்டாம். அவை பற்றி என்னுடைய அறையிலே வந்து கேட்டு அந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

(3) உரிமைப் பிரச்சினைகள்.

அ. வானொலி நிலையத்தின் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவை உரிமை குறித்த பிரச்சினைகள். பேரவையின் 184-வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒரு அறிவிப்புக் கொடுத்துள்ளார். 'சட்டமன்றத்தில் இன்று' என்ற தலைப்பில் வானொலியில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுவதில், சில நிகழ்ச்சிகள் விடப்பட்டுள்ளது என்றும் அது அவை உரிமை மீறல் ஆகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது எப்படி அவை உரிமை மீறல் ஆகிறது என்று மிக சுருக்கமாக திரு. சுப்பு அவர்களை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், இடையிலே கேட்கக் கூடாது.